**கம்பஹா விக்கிரமாரச்சி உள்நாட்டு மருத்துவக் கல்லூரி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பகா விக்கிரமாரச்ச ிஉள்நாட்டு மருத்துவக் கல்லூரியின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107(05) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

---

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான

"சிறப்பாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை அரச துறை பொது கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| உரிய தரத்தின் தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் கொள்வனவு செய்து வழங்கப்படாது களஞ்சியத்தில் காணப்படும் செலவினம் ரூபா.8,510,955 ஆன 15 மூலதன பொருட்களுக்கு ஏற்புடையதாக 379 உருப்படிகள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 14 ஆவது பந்தி படி சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்படுதல் வேண்டுமாயினும், அதறகுப் பதிலாக நடைமுறை சொத்துகளாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படுகின்ற நடைமுறை சொத்துக்களில் செலவினம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களின் செலவினம் அதற்கு சமமான பெறுமதியில் ஒழுங்குமுறையில் அதிகமாகவும் குறைவாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்திடம் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள், இருப்புகளின் முற்பணக் கணக்கு ஊடாக மேற்கொள்ளப்படுவதாகவும், உரிய மூலதன பொருட்களை வழங்கிய பின்னர் நிலையான சொத்துக்களை அடையளாம் காணப்படுவதாகவும், அதுவரை தேய்மானம் மேற்கொள்ள இயலாதெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை சரியாக அடையாம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.118,800,000 ஆன மூலதன அளிப்புகள் தொடர்பில், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம் நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணுதல் மற்றும அளவையிடல் மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்வரும் காலத்தில் ஏற்புடையவாறு அறிக்கையிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் மோட்டார் வண்டி பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா.1,150,500 தொகை மூலதனமயப்படுத்தியதன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மோட்டார் வாகன | உயர் கல்வி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற மோட்டார் வண்டி பயன்படுத்துவதற்கு முடியுமான மட்டத்தில் இருக்காத படியால், உரிய முகவர் நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்பட்டு ஓட்ட நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான | மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| செலவினம் அதற்கு சமமான பெறுமதியிலும், ஆண்டுக்கு ஏற்புடையதான மோட்டார் வாகன தேய்மானம் ரூபா.247,752 ஆலும் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் மிகை ரூபா.902,748 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டதெனவும், முதலாவது முறையாக பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் பழுதுபார்ப்பதற்கு மேற்கொண்ட அடிப்படை செலவினம் அதன்படி மூலதனமயப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் நிதி ஒழுங்குவிதிக் கோவை 570 (இ) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் 2 ஆண்டுகள் விஞ்சிய மொத்தம் ரூபா.1,240,057 ஆன பிடிபணம் தொடர்பில் நிதிஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த தொகையில் ரூபா.101,500 ஆன தொகை தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதெனவும், எஞ்சிய பெறுமதி 2022 ஆம் ஆண்டில் விடுவிப்பதற்கு அல்லது வருமானத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 பெப்ருவரி 16 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் இணையத்துடன் நேரடி கற்கை, கற்கை மற்றும் மதிப்பீட்டுக்காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளைப் (IT Infrastructure for Online Teaching, Learning and Assessment) பெற்றுக்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டிருந்த ரூபா. 10,000,000 ஐ 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஏற்புடைய நோக்கங்களின் பொருட்டு உபயோகப்படுத்தாது நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகங்களை தாபித்து உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு ஏற்புடையதான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளும் வரை, உரிய பணத்தொகையினை குறுகிய காலத்திற்கு முதலீடு செய்துள்ளதுடன், தற்போது உரிய பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | வழங்கியுள்ள பணத்தொகை உரிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பயன்படுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

பல்கலைக்கழகத்தில் மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.57,234,604 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா.45,350,417 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.11,884,187 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீண்டுவரும் அளிப்புகளின் அதிகரிப்பு பிரதான காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகமாக தாபிக்கப்பட்ட நிறுவனத்தில் 03 பீடங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்படினும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிலவிய உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான பீடம் மட்டும் நடைமுறைப்பட்டது. புதிய இரண்டு பீடங்களையும் ஆரம்பிக்கப்படாவிடினும், குறித்த பீடங்களின் பொருட்டு கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணிக்கு 48 பேர் 2021 ஆகஸ்ட் மாதமாகும் போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அன்றைய திகதி தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு திசெம்பர் 31 வரை சம்பளம் மற்றும் படியாக மொத்தம் ரூபா.41,423,070 செலுத்தப்பட்டிருந்தது. | 4 பல்கலைக்கழக பீடங்களின் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி ஆட்சேர்ப்புச் செய்தல் முடிவுறுத்தப்பட்டுள்ளதெனவும், 2022 மார்ச் 21 ஆம் திகதி தொடக்கம் இணையத்துடன் நேரடி தொடர்பு மூலம் கற்பித்தல் மேற்கொள்வதால், கற்பித்தல்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதால் குறித்த ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. | சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதில் பயன் பெறுவதற்காக பீடங்களில் கல்வி நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 நிதியத்தின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 14 நிதியங்களில் நிலவிய மொத்தம் ரூபா.6,457,008 தொகை மீளாய்விற்கான ஆண்டில் ஏற்புடைய நோக்கங்களின் பொருட்டு உபயோகப்படுத்தவில்லை. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக உரியவாறு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு இயலவில்லை என்பதுடன், 2022 ஆம் ஆண்டில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நிதியம் பயன்படுத்தல் வேண்டும். |

## 3.3 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நான்கு மாடி கல்விக் கட்டிடத்தின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் ரூபா.மில்லியன் 134.5 ஆன ஒப்பந்த பெறுமதிக்கு 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி வழங்கியிருந்த போதிலும், ஏற்பட்ட பிணக்கு காரணமாக 2019 யூலை 03 ஆம் திகதி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், அன்றைய திகதியில் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா.மில்லியன் 114.15 ஆகும். கட்டிடத்தின் எஞ்சிய நிருமாணிப்பு நடவடிக்கைகள் 11 கட்டமாக 2020 திசெம்பர் 24 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்பட்ட போதும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் வேலைகளை முடிவுறுத்தவில்லை என்பதுடன், இந்த நிருமாணிப்பு பணிகளின் பொருட்டு ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனத்திடம் ரூபா.4,247,209 ஐ செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரர் நிருமாணிப்பு நடவடிக்கைகளை உரியவாறு மேற்கொள்ளாமை காரணமாக இருதரப்பு இணக்கப்பாட்டுக்கமைவாக நிருமாணிப்புகளிலிருந்து அகற்றப்பட்டதாகவும், அதன் பின்னர் வேறு இரண்டு ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு எஞ்சிய நிருமாணிப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக நாட்டில் நிலவிய பிரச்சினைகளுடன்கூடிய நிலைமையால் நிருமாணிப்பு நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு முடியவில்லை. | கட்டிடத்தின் நிருமாணிப்புகளை துரிதமாக முடிவுறுத்தப்பட்டு பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |